ESIOP 1/2024. 15.04.2025

ம.த.சாட்சி 1 திருமுருகன். குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். என்னுடைய வங்கி கணக்கை எதிர்மனுதாரர் அட்டாச் செய்துவிட்டதால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். நான் ஸ்ரீபூஜா என்ஜினியரிங் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்தை மனுவில் குறிப்பிட்டுள்ள விலாசத்தில் தான் நடத்தி வருகிறேன். நான் எதிர்மனுதாரரிடம் இருந்து ஈ.எஸ்.ஐ கோட் பெறுவதற்காக விண்ணப்பிக்கும்போது ஸ்ரீபூஜா என் ஜினியரிங் ஒர்க்ஸில் எத்தனை நபர்கள் பணிபுரிகிறார்கள் என்ற விவரங்கள் அனைத்தையும் பதிவு செய்து தான் விண்ணப்பித்தேன். பிரமாண வாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள ஈ.எஸ்.ஐ கோட் எண்ணானது என்னுடைய ஆடிட்டர் தொழிலாளர்கள் பற்றிய விவரங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்ததின் அடிப்படையில் தான் வழங்கப்பட்டது என்றால் அது என்னுடைய ஆடிட்டருக்கு தான் தெரியும். நான் இந்த மனுவை ஸ்ரீபூஜா என்ஜினியரிங் ஒர்க்ஸ், அதன் உரிமையாளர் திருமுருகன் என்று குறிப்பிட்டு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு ஸ்ரீபூஜா என்ஜினியரிங் ஒர்க்ஸ் என்ற பெயரில் தான் ஈஎஸ்ஐ கோட் வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் தற்போது காட்டப்படும் ஆவணம் ஸ்ரீபூஜா என் ஜினியரிங் ஒர்க்ஸ்.க்கு அனுப்பபட்ட ஆவணம்தான் அது **எ.ம. சா.ஆ1** . நான் ஸ்ரீபூஜா என் ஜினியரிங் ஒர்க்ஸில் ஆட்களை வேலைக்கு எடுத்து பணிக்கு அனுப்புகிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய மனுவின் பத்தி 1 மற்றும் 2ல் ஸ்ரீபூஜா என்ஜினியரிங் ஒர்க்ஸில் ஆட்களை வேலைக்கு எடுத்து அனுப்புவேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அதற்காகதான் நான் ஜிஎஸ்டி செலுத்திவருகிறேன் என்றால் சரியல்ல. நான் ஸ்ரீபூஜா என் ஜினியரிங் ஒர்க்ஸை தனியாகவும், ஆட்களை வேலைக்கு எடுப்பதை தனியாகவும் பார்த்து வருகிறேன் என்ற விவரத்தை என்னுடைய மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். ஈஎஸ்ஐ நிறுவனத்தில் பதிவு செய்தது அனைத்தும் என்னுடைய ஆடிட்டர் தான் அவருக்கு தான் அனைத்து விவரங்களும் தெரியும் எனக்கு எதுவும் தெரியாது. நான் என்னுடைய ஆடிட்டருக்கு தான் எல்லாம் தெரியும் என்ற விவரத்தை புதிதாக தற்போது தான் நிரூபண வாக்குமூலத்தில் கூறுகிறேன் என்றும் என்னுடைய மனுவில் அதுகுறித்து எதுவும் கூறவில்லை என்றால் சரிதான். ஆடிட்டரை நான் இந்த வழக்கில் விசாரிக்கபோவதில்லை. நான் ஆட்களை வேலைக்கு எடுத்து அனுப்புவதற்கு லைசன்ஸ் எதுவும் வாங்கவில்லை. எனக்கு ஈஎஸ்ஐ நிறுவனத்திடம் இருந்து 03.01.2022 தேதியிட்ட கடிதம் வந்தது என்றால் சரிதான். அந்த கடிதம் **எ.ம.சா.ஆ.2.** நான் அதனை நேரடியாக பெறவில்லை. என் பக்கத்தில் உள்ள பார்பர் சாப்பில்கொடுத்துவிட்டார்கள். அந்த கடிதத்தின் அடிப்படையில் நான் ஈஎஸ்ஐ நிறுவனத்தை அணுகி எந்த விவரமும் கேட்கவில்லை. 03.01.2022 தேதியிட்ட கடிதம் ஈஎஸ்ஐ நிறுவனத்திடம் இருந்து எனக்கு வந்தது என்றால் சரிதான் அது **எ.ம.சா.ஆ.3.** 09.03.2022 அன்று ஈஎஸ்ஐ நிறுவனத்திடம் இருந்து எனக்கு கடிதம் வந்தது என்றால் சரிதான். அது **எ.ம,சா.ஆ 4** அதில் ஈஎஸ்ஐ நிறுவனம், என்னுடைய நிறுவனம் சம்மந்தபட்ட ஆவணங்களை எடுத்துகொண்டு 25.05.2022 அன்று வரவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது என்றால் சரிதான். ஆனால் அந்த கடிதத்தை எனக்கு வெகுநாட்கள் கழித்துதான் பார்பர் சாப்பில் இருந்து கொடுத்தார்கள். எனக்கு

எ.ம.சா.ஆ4 கடிதம் வெகுநாட்கள் கழித்துதான் என் கைக்கு கிடைத்தது என்ற விவரத்தை என்னுடைய மனுவில் கூறவில்லை என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக இந்த காரணத்தை புனைந்து சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய மனுவில் 6வது பத்தியில் எனக்கும் எனது தாயாருக்கும் வலது காலில் காயம் ஏற்பட்டதால் தான் ஈஎஸ்ஐ நிறுவனம் குறிப்பிட்ட விசாரணை தேதியான 22.05.2022 அன்று நான் செல்லவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த ஆவணம் ம.சா.ஆ4 17.08.2019 என்று தேதி காணப்படுகிறது என்றால் சரிதான். அன்றைய தினம் தான் எனது தாயாரை சிகிச்சைக்காக அழைத்துசென்றேன் என்றால் சரிதான். **ம.சா.ஆ.5** நான் தாக்கல் செய்த மருத்துவ பரிந்துரைகள் மற்றும் ஆவணங்கள் என்றால் சரிதான். அதில் மொத்தம் 6 ரசீதுகள் காணப்படுகின்றன என்றால் சரிதான்.அதில் முதலாவது ரசீது கார்த்திகேயன் கிளினிக்கில் வழங்கப்பட்ட ரசீது. அது 20.04.2022 தேதியிட்டது என்றால் சரிதான். இரண்டாவது ரசீதின் தேதி 29.10.2022 என்றால் சரிதான். மூன்றாவது ரசீது ஸ்ரீராம் மருத்துவமனையில் வழங்கப்பட்டது. அதில் குறிப்பிடபட்டுள்ள தேதிகள் முறையே 07.12.2022, 08.12.2022, 09.12.2022 மற்றும் 27.12.2022 என்றால் சரிதான். நான் ஈஎஸ்ஐ நிறுவனம் குறிப்பிட்டுள்ள விசாரணை தேதிகளில் ஆஜராகததால் ஈஎஸ்ஐ நிறுவனம் நான் அளித்த விவரங்களின் அடிப்படையில் பிரிவு 45(ஏ)ன் கீழ் உத்தரவு பிறப்பித்து அந்த உத்தரவு நகலை எனக்கு அனுப்பியது என்றால் சரிதான். அது **எ.ம.சா.ஆ.5.** என்னுடைய நிறுவனம் சம்மந்தப்பட்ட ஜிஎஸ்டி அலுவலகத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆவணம் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான். அது **எ.ம.சா.ஆ6.** எ.ம.சா.ஆ.6ல் ஸ்ரீபூஜா என்ஜினியரிங் ஒர்க்ஸ ுக்கான ஜிஎஸ்டி வரிகள் அனைத்தும் அந்தந்த காலகட்டத்தில் என்னால் முறையாக செலுத்தப்பட்டதாக குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ 5ன் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட 45(ஏ) உத்தரவின் கீழ் ஈஎஸ்ஐ நிறுவனம் ரெக்கவரி நடவடிக்கை எடுத்தது. அதுசம்மந்தமாக எனக்கு அறிவிப்பும் அனுப்பியது என்றால் சரிதான். அந்த அறிவிப்பு **எ.ம.சா.ஆ 7.** அந்த அறிவிப்பில் நான் என்னுடைய Contribution தொகையாக ரூ. 3,86,016./ குறிப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஸ்ரீபூஜா என்ஜினியரிங் ஒர்க்ஸில் சம்மந்தப்பட்ட Service Tax மற்றும் வருமான வரி கணக்கு தாக்கல் செய்ததற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால்நான் எந்த வகையான வியாபாரம் செய்து வருகின்றேன் என்றும், எத்தனை நபர்கள் பணிபுரிகிறார்கள் மற்றும் எவ்வளவு ரூபாய் சம்பளம் வழங்குகிறேன் என்ற விவரங்கள் தெரியவரும் என்றால் சரிதான். அந்த விவரங்கள் அனைத்து தெரிந்துவிடும் என்பதால்தான் அந்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது நிறுவனத்தில் எ.ம.சா.ஆ .1ல் குறிப்பிட்டுள்ளபடி 21 நபர்கள் பணிபுரிகிறார்கள் என்றால் சரிதான். நான் இந்த வழக்கிற்காக என்னுடைய நிறுவனத்தில் யாரும் பணிபுரியவில்லை என்றும் யாருக்கும் நான் சம்பளம் வழங்கவில்லை என்றும் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவதுபோல் யாரையும் வைத்து வேலை வாங்கவில்லை மற்றும் அவர்களுக்கு சம்பளம் எதுவும் வழங்கவில்லை என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஈஎஸ்ஐ நிறுவனத்தில் இருந்து அறிவிப்புகள் வந்தபின்பும், விசாரணை தேதி குறிப்பிட்டு

வந்தபோதும் பிரிவு 45(ஏ) ன் கீழ் உத்தரவு பிறப்பிக்கபட்ட பின்பும் நான் சம்மந்தப்பட்ட ஈஎஸ்ஐ அதிகாரிகளை உரியஆவணங்களுடன் நேரில் சென்று கேட்காமல் ரெக்கவரி அறிவிப்பு வந்தபின்புதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய மனுவின் பரிகாரத்தில் 45(ஏ) ன் கீழ் பிறப்பிக்கபட்ட உத்தரவினை குறித்து பரிகாரம் கோராமல் ஈஎஸ்ஐ நிறுவனம் அனுப்பிய விசாரணை தேதி குறித்த அறிவிப்பு சம்மந்தமாக பரிகாரம் கோரியிருப்பது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஈஎஸ்ஐ நிறுவனத்திற்கு கான்டிரிபுயசன் தொகையை செலுத்துவதில் இருந்து தப்பிப்பதற்காக எனக்கு சட்டத்தை பற்றிய போதிய அறிவு இல்லை என்றும், உங்களுடைய அறியாமையை பயன்படுத்தி கொள்வது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ஒரு நிறுவனத்தை நடத்தும் நான் சட்டபூர்வமான நடவடிக்கைகளை பற்றி தெரிந்திருக்க வேண்டும். எனக்கு சட்டபூர்வ நடவடிக்கைகள் பற்றி தெரியாது என்று வழக்கில் இருந்து தப்பிபதற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய மனுவில் ஒரு சங்கதியும், பிரமாண வாக்குமூலத்தில் ஒரு சங்கதியும் சாட்சியத்தின் போது ஒரு சங்கதியும் மாற்றிமாற்றி கூறுவது எனக்கு வழக்கிற்கு பாதகமாக உள்ளது என்றும் அதனடிப்படையில் இந்த மனு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் என்னுடைய மனுவில் 45(ஏ)ன் கீழான உத்தரவு குறித்து எந்த வித பரிகாரமும் கோராததால் இந்த மனுவானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. நான் கான்டிரிபுயசன் தொகையை கண்டிப்பாக செலுத்தவேண்டும் என்றும், அதில்இருந்து தப்பிக்கும் பொருட்டும் காலதாமதம் செய்யவேண்டி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/Tmt. S. Uma Maheswari,
Presiding Officer,
Principal Labour Court, Vellore.